# தமிழ் இலக்கியங்களில் பண்பாட்டுப் பதிவுகளும் மாற்றங்களும்

தொகுதி-I




பதிப்பாசிரியர்

முனைவர் க. முருகேசன்

முனைவர் சு. குமரன்

முனைவர் சு. சதாசிவம்



தமிழ் இலக்கியங்களில் பண்பாட்டுப் பதிவுகளும் மாற்றங்களும்

தொகுதி-I

தமிழ் இலக்கியங்களில் பண்பாட்டுப் பதிவுகளும் மாற்றங்களும்

தொகுதி-I


"ஆற்றுதல் என்பது அலந்தவர்க்கு உதவுதல்
போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை
பண்பெனப் படுவது பாடறிந்து ஒழுகுதல்
அன்பெனப் படுவது பேதையர் சொல்நோன்றல்
செறிவெனப் படுவது மறைபிறர் அறியாமை
முறையெனப் படுவது கண்ணோடாது உயிர்வவ்வல்
பொறையெனப் படுவது போற்றாரைப் பொறுத்தல்
கால்வரை நில்லாக் கடுங்களிற் றெருத்தல்
யாழ்வரைத் தங்கி யாங்கு"

\- கலித்தொகை, பா.133.


செம்மூதாய் பதிப்பகம்
A3, அபிராமி நிவாஸ்
நெ. 43, வால்மீகித் தெரு
கிழக்குத் தாம்பரம்
சென்னை 600 059
கைபேசி : 9444? 00369
semmoodhai@gmail.com

ISBN:978-93-81006-72-6

₹.300

# தமிழ் இலக்கியங்களில் பண்பாட்டுப் பதிவுகளும் மாற்றங்களும்

**(பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கம்)**


பதிப்பாசிரியர் : **முனைவர் க. முருகேசன், முனைவர் சு. குமரன் முனைவர் சு. சதாசிவம்**

பதிப்புரிமை : பதிப்பாசிரியர்கள்

முதற்பதிப்பு : டிசம்பர், 2013

வெளியீடு : செம்மூதாய் பதிப்பகம்
ஏ3, அபிராமி நிவாஸ், 43 வால்மீகி தெரு
கிழக்குத் தாம்பரம், சென்னை - 600 059.
கைபேசி : 9444200369 / 9444327963

கணினி : செந்தமிழ் தட்டச்சு மையம், சென்னை - 63.

அச்சாக்கம் : மணி ஆப்செட், திருவேற்காடு, சென்னை-77.

பக்கங்கள் : XXXV + 1 - 480

விலை : உரு. 300 /-

ISBN : 978 - 93 - 81006 - 72 - 6


## TRADITION AND CULTURAL TRANSFORMATIONS IN TAMIL LITERATURE

(International Conference)


Editor's : **Dr. K. Murugesan, Dr. S. Kumaran Dr. S. Sathasivam**



Copyright : Editor's



First Edition : December, 2013

Published : **Semmoodhai Pathippagam**
A3, Abirami Nivas, 43 Valmiki Street
East Tambaram, Chennai-600 059.
Cell : 944200369 / 9444327963

Computer : **Senthamizh Typing Centre**,Chennai-63.

Printing at : **Mani Offset**, Thiruverkadu, Chennai-77.

Pages : XXXV + 1 - 480

Price : **Rs. 300/-**





**முனைவர் மா. ஆறுச்சாமி**
*செயலர் மற்றும் இயக்குநர்*
*கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி*
*கோயம்புத்தூர் - 641 029.*


## அணிந்துரை

பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் உருவான மனித இனம் தொடக்கத்தில் காடுகளில் சுற்றித் திரிந்து விலங்குகளைப் போல வாழ்ந்து வந்தது. தனக்கே உரிய தனித்த அறிவுத்திறனையும் சிந்தனை வளத்தையும் பயன்படுத்தி வாழ்க்கையைச் செம்மைப்படுத்திக் கொண்டு அளப்பரிய ஆற்றலின் மூலம் இன்றைக்குச் செயற்கரிய செயல்களைச் செய்து வருகின்ற இனமாக மனித இனம் திகழ்கின்றது. மனிதனை விலங்குகளிலிருந்து இனம்பிரித்துக் காட்டும் கூறுகளில் பண்பாட்டிற்குத் தனியிடமுண்டு. மேலைநாட்டு அறிஞர்கள் சிலர் வெறும் புறத்தோற்றத்தையே பண்பாட்டுடன் இணைத்துப் பேசுகின்றனர். நாகரிகமே பண்பாடு என்று கூறுவோரும் உள்ளனர். பண்பாடு என்பதை ஆங்கிலத்தில் Culture என்ற சொல்லால் குறிப்பிடுகின்றனர். ஆங்கிலத்தில் வழங்கி வரும் Agriculture என்ற சொல்லையும் கவனிக்க வேண்டும். மற்றவர்களுக்கு வேண்டிய உணவு முதலியவற்றைக் கொடுக்கும் வகையிலும், நல்ல பயிர் விளையும் வகையிலும் நிலத்தைப் பண்படுத்துதல் Agriculture என்பதாகும். இவ் அடிப்படையில் மனிதன் பிறருக்கு உதவும் வகையில் யான், எனது என்ற ஆணவமின்றித் தன் மனதை நல்ல வழியில் செலுத்திச் சான்றோர்களின் கருத்துக்களை எருவாக இட்டு, நற்சிந்தனை என்னும் ஏரைப் பூட்டி, மனமாகிய நிலத்தைப் பண்படுத்துவதே 'பண்பாடு' என்பதன் உள்ளார்ந்த பொருளாகும். பண்பட்ட நிலத்தில் விளையும் பயிர் பிறருக்கு உணவாக உதவுவது போல, உள்ளம் பண்பட்ட உயர்ந்தோர்கள் உடல், பொருள், உயிர் ஆகிய அனைத்தையும் தன்னலம் கருதாது பிறருக்குக் கொடுத்து உதவுவார்கள் என்பது உண்மை.

ஆதிகாலத்தில் தனித்து வாழ்ந்த மனிதனை இணைத்து வைத்ததே பண்பாடுதான். தானும் வாழ்ந்து பிறரையும் வாழவைக்கின்ற பண்பாடே முதன்முதலில் மனித சமுதாயத்தை உருவாக்கியது. இன்றைய நிலையில், மக்களில் பெரும்பாலோர் தன்னலம் மிக்கவர்களாக வாழ்ந்து வருகின்றனர். வழிவழியாக வந்த பண்பாட்டுக் கூறுகள் இன்று வழக்கொழிந்து வருகின்றன. போட்டியும் பொறாமையும் மிக்க இயந்திரத்தனமான இன்றைய உலகில் மேலை நாட்டு மக்களின் வாழ்க்கை முறைகளைப் பின்பற்றுவதை நம்மவர் உயர்வாகக்